வருவாய்த்துறை மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம், நாமகிரிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், மங்களபுரத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில், நாரைகிணறு பகுதி வாழ்மக்களுக்கு பட்டாக்களை வழங்கினார். உடன் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா, பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் கு.பொன்னுசாமி உட்பட பலர் உள்ளனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற தொகுதி, பெத்தநாயக்கன்பாளையம் மத்திய ஒன்றியம், வெள்ளாளப்பட்டி ஊராட்சியில் தனது தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அமைக்கப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டியைகள்ளக்குறிச்சிநாடாளுமன்றஉறுப்பினர்டாக்டர்பொன்கௌதமசிகாமணி பொதுமக்கள்பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். பெத்தநாயக்கன்பாளையம் மத்திய ஒன்றிய செயலாளர் மூர்த்தி, பெத்தநாயக்கன்பாளையம் தெற்கு ஒன்றிய செயலாளர் அன்பு (எ)மருத முத்து, பெத்தநாயக்கன்பாளையம் வடக்கு ஒன்றிய செயலாளர் சிவராமன் முத்துலிங்கம், பொதுக்குழு உறுப்பினர்கள் மனோகரன், சந்திரமோகன் இளைஞர் அணி சிவராமன் வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் பொறியாளர்கள் பலர் உடனிருந்தனர்.

12.30 லட்சம் ரூபாய் மதிப்பில் புதிய நியாய விலைக் கடை!

அமைச்சர் செஞ்சி மஸ்தான் திறந்து வைத்தார்!

செஞ்சி, மார்ச் 2-

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் பழவலம் ஊராட்சியில் புதிய நியாய விலை கடை கட்டிக் கொடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் அரசுக்கு கோரிக்கை வைத்தனர்.

இக் கோரிக்கினை ஏற்று செஞ்சி தொகுதி சட்டமன்றஉறுப்பினர் மேம்பாட்டு நிதி திட்டத்தின் கீழ் 12 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய நியாய விலை கடை கட்டிடம் கட்டப்பட்டு அதன் சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

செஞ்சி ஒன்றிய பெருந் தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார்.

ஊராட்சி மன்ற தலைவர் சேகர், ஒன்றிய கவுன்சிலர் பூங்காவனம் ராமசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மழுவந்தாங்கல் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க செயலாளர் திலகவதி அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன்மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞரின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி புதிதாக கட்டப்பட்ட நியாய விலை கடையை மக்கள் பயன்பாட்டுக்கு திறந்து வைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு ரேஷன் பொருட்களையும், பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு 1லட்சத்து 62 ஆயிரத்து 735 ரூபாய்க்கான ஊக்க தொகை வாங்கும் நிகழ்வாக ஐந்து நபர்களுக்கு ஊக்கத் தொகையை வழங்கி சிறப்புரை ஆற்றினார்.

நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் செஞ்சி மஸ்தான் பெண் கல்வி உயர வேண்டும் பெண் கல்வியில் பெண்கள் படித்து பட்டம் பெற வேண்டும் என்பதற்காக புதுமைப்பெண் திட்டத்தை துவக்கி வைத்து அவர்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கி வருகிறார்.

அந்த வகையில் ஆறாம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை அரசு பள்ளியில் படிக்கும் ஆண் பிள்ளைகளின் உயர் கல்வி படிப்பதற்கு தமிழ் புதல்வன் திட்டத்தை அறிவித்து அவர்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வாங்குவதற்கு உத்தரவிட்டுள்ளார்கள்

பத்து ஆண்டுகளில் தமிழ் நாட்டில் அனைவரும் படித்த சமுதாயமாகவும் எல்லோரும் படித்து விட்டால்பொருளாதாரத்தை வளர்த்துக்கொண்டு திறமையாக செயல் படுத்துவதற்கும் எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்பதுதான்திராவிட மண்டல் ஆட்சி.

அந்த வகையில் எல்லோருக்கும் பயனுள்ள ஆட்சியாகவும் எல்லோருக்கும் ஆனவர் தமிழ்நாடு முதலமைச்சர் என்று அமைச்சர் செந்தில் மஸ்தான் பெரிமிதம் தெரிவித்தார்.

முன்னதாக தமிழ்நாடு முதலமைச்சர் காணொளி காட்சி வாயிலாக பழ வலம் ஊராட்சியில் குழந்தை நேய பள்ளி உட் கட்டமைப்பு மேம்பாட்டு நிதி திட்டத்தின் கீழ் 28.15லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்கட்டப்பட்ட கூடுதல் வகுப்பறைகட்டிடத்தை திறந்து வைத்ததையடுத்து அமைச்சர் செஞ்சி மஸ்தான் வகுப்பறையில் மாணவர்களுக்கு கற்றல் கற்பித்தல் திறன் குறித்து ஆய்வு மேற்கொண்டார். தொடர்ந்து சத்துணவு அறையில் மாணவர்களுக்கு வழங்கப்படும் முட்டை மற்றும் சத்துணவு களைஅவர் ஆய்வு செய்தார்.

நிகழ்ச்சியில் செஞ்சி மத்திய ஒன்றிய செயலாளர் விஜயராகவன், ஒன்றிய கவுன்சிலர் சீனிவாசன், கூட்டுறவு சார்பதிவாளர் ரூபன் கென்னடி, கூட்டுறவு சங்க செயலாளர் கார்த்திகேயன்,ஒன்றியவை தலைவர் வாசு, மாவட்ட பிரதிநிதி அய்யாதுரை, நிர்வாகி கள் ராஜேஷ், பாண்டுரங்கன், ஆசைத்தம்பி, குப்பன், மழுவந்தாங்கல்திருநாவுக்கரசு,திருமாவளவன், ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் செந்தில்குமார்உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் பழவலம்ஊராட்சியில் புதிய நியாய விலை கடையை சிறுபான்மையினர்நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் மக்கள் பயன்பாட்டுக்கு திறந்து வைத்தார். அருகில் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் உள்ளார்.

நாமும் வாழ்த்துகிறோம்! அவர்களும் வாழ்த்துகிறார்கள்!

முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு - திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி வாழ்த்து!

சென்னை, மார்ச் 2 -

"நானும் வாழ்த்துகிறோம், அவர்களும் வாழ்த்துகிறாரகள்" என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவடர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு: -

நாளை (1-3-2024) நமது 'திராவிட மாடல்' ஆட்சியான தி.மு.க. ஆட்சியின் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு 71 ஆம் ஆண்டு பிறந்த நாள் பெருவிழா!

இது வெறும் கட்சி விழாவாகவோ, அதிகாரவர்க்க விழாவாகவோ அல்லாமல், மக்கள் மகிழ்ந்து கொண்டாடும் மக்கள் விழாவாக இன்று தமிழ்நாட்டில் மட்டுமல்ல, அயலகத்தில் உள்ள நம் மக்கள் உள்பட அனைவரும் மகிழ்ச்சிப் பெருக்குடன் கொண்டாடுகிறார்கள்.

காரணம், அவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்ற மாமனிதர் செயற்கரிய செய்து நாளும் மக்களின் இதயச் சிம்மாசனத்தில் இடம்பெறுபவராக ஆகிவருகிறார்! உள்ளத்தில் பொய்யாது ஒழுகுகிறார்!

அதன் காரணமாக, உலகத்தாரின் உள்ளத்தில் பாசத்துடன் இடம்பிடித்து தமது ஆட்சியை, வெறும் காட்சியாக அமைக்காமல் ஒடுக்கப்பட்ட கோடானு கோடி மக்கள் மக்கள் தொகையில் சரி பகுதி உள்ள பெண்கள் "கல்வி பெற கதியில்லையே, காரணம் நம்மை வறுமை வாட்டுகிறதே; வாழ்வாதார வயிற்றுக் கஞ்சிக்கே வகை தேடித் திரியும் நிலையில், எப்படி நம் பிள்ளைகளைப் படிக்க வைப்பது!" என்று ஏங்கிய மக்களின் பிள்ளைகளுக்கு முந்தைய பகல் உணவு, சத்துணவு தாண்டி, காலைச் சிற்றுண்டியும் தந்து, ஒரு கல்விப் புரட்சியை அமைதிப் புரட்சியாக்கி இந்தியாவிற்கே வழிகாட்டும் கல்வி வள்ளலாகி, கவலை போக்கும் காவல் ஆட்சித் தலைவராக நின்று, "ஆளும் இதயத்தை அன்பு நதியினில் நனைத்து ஆளும் நம் முதலமைச்சரை" அவர்களும் நாளும் வாழ்த்துகின்றனர்!

"அய்யயகோ, எங்கள் பெண் குழந்தைகள் உயர்கல்வியைப் பெற ஆசைப்பட்டும், அதைப் பெற்றுத் தரும் வசதி எம்மிடம் இல்லையே" என்று வருந்தி, கசிந்துருகி, கண்ணீர் விட்ட பெற்றோர் தங்கள் கண்ணீரைத் துடைத்து, "என்ன, மாதந்தோறும் ஆயிரம் ரூபாயா? அதுவும் எனது குடும்பத்திலிருந்து கல்லூரிக்குச் செல்லும் மூன்று பிள்ளைகளுக்கும் கூடவா?" என்று வியப்பின் விளிம்பில் நின்று இப்போது மகிழ்ச்சிக் கண்ணீர் வழிகிறது!

"நாளெல்லாம் வீட்டில் மாடென உழைத்தும், அடுப்புப் புகையும், அவலக் கண்ணீரும் தானே நமக்கு மிஞ்சியது! அக்கம் பக்கத்தில் வாங்கிய கடனைக்கூட அடைக்க வழியில்லையே, மானம் காக்க நாம் தற்கொலை செய்துகொள்வதைத் தவிர வேறுவழியில்லையே" என்று கண்ணீரும், கம்பலையுமாய் இருந்த ஏழைக் குடும்பத் தலைவிக்கு, "மாதாமாதம் 1000 ரூபாய் வந்து வீட்டுக் கதவைத் தட்டுகிறதே" என்று உவகை பொங்கும் உள்ளத்தோடு உலவும் தாய்மார்களான அவர்களும் வாழ்த்துகிறார்கள்!

புதிய புதிய தொழில் முதலீடுகளைத் தேடி, நாடிச் சென்றும், உலகத்தோரை இந்த 'அமைதிப் பூங்கா'வாம் தமிழ்நாட்டில் தொழில் தொடங்க அழைத்து, வேதனையின் உச்சத்தில், வருந்திய விரக்தியில், வேலை கிட்டா ஆயிரக்கணக்கான நம் இளைஞர்களுக்குப் புதிய புதிய தொழில் வாய்ப்புகள் என்ற நம்பிக்கை ஒளிக்கீற்று கிடைத்த மகிழ்ச்சியினால்.

அவர்களும் வாழ்த்துகிறார்கள்!

சமூகநீதிக்காகப் போராட்டக் களத்தில் களமாடிய ஒடுக்கப்பட்ட மக்களுக்கே முன்னுரிமை என்பதை நாளும் செயல்படுத்தி, அதற்கான வழிமுறை சட்டங்கள், ஆணைகள், ஆணைய அமைப்புகளோடு இட ஒதுக்கீடு சரியாக செயல்படுகிறதா என்று கண்காணிக்கும் குழுவை நியமித்து, ஆய்வு செய்து, பிறகு ஆவன நடவடிக்கைக்கு ஆணை பிறப்பித்தல், சமூகநீதி இவ்வாட்சியில் வெறும் 'ஏட்டுச் சுரைக்காய்' அல்ல நிதர்சனமான உண்மை என்பதை உணர்ந்து, பயன்பெறும் பல்லாயிரம் தமிழ்நாட்டு இளைஞர்கள், படித்து வேலை வாய்ப்பற்று இருந்தவர்களுக்குக் கதவு திறக்கப்பட்டது.

இவ்வளவு செய்ய, நமக்குரிய நிதியை ஒன்றிய பா.ஜ.க. மோடி அரசு தராமல் சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், தூத்துக்குடி, நெல்லை, விருதுநகர் மாவட்டங்களின் மழை வெள்ளக் கொடுமைக்கான நிவாரணத்தைக்கூட ஒரு ரூபாய் அளவில்கூடத் தராமல் ஈரமற்ற இதயத்தோடு, "தமிழ்நாடு அரசு எப்படி நடக்கிறது, பார்க்கிறோம்" என்று நிதிக் குரல்வளையைப் பிடித்து வஞ்சித்தாலும், தமது பொறுமையும், பொறுப்பும் அமைந்த அவரது அணுகுமுறையால், "எதிர்நீச்சலிலும் எப்போதும் வெற்றி பெறுவேன். அது எனது தலைவர்களான பெரியார், அண்ணா, கலைஞரிடம் நான் கற்ற துணிச்சலின் அணுகுமுறை" என்பதை வழிமுறையாகக் காட்டி, கோபம் நிறைந்த வேகம் காட்டவேண்டிய தருணத்தில் கூட பொறுமையுடன், "விவேகமே வெற்றி தரும்" என்ற தனது ராஜதந்திரம் (Statesmanship) மூலம், மலையாய் வந்த சோதனைகளைப் பனியாய் உருகிப் போகச் செய்து, அவர் ஆளும் நேர்மை, நேர்த்தியைச் சான்றோர்களான பொது மனிதர்களும் பாராட்டுகிறார்கள்!

ஆம் அவர்களும் வாழ்த்துகிறார்கள்!

இப்படி மாமழையெனக் குவியும் வாழ்த்துகளையும் கண்டு அவர் உற்சாகமாகியுள்ளார்!

வசவுகளைக் கண்டு மேலும் உழைக்க உறுதிமேல் உறுதி கொண்டு, உழைப்பின் உருவமாக உலா வருகிறார்!

"கடமையாற்றிக் காலத்தை வெல்லும்" எங்கள் காவலரே, முதல்வரே, வாழி! வாழி!! பல்லாண்டு நலமுடன் வாழி, என்று நாமும் வாழ்த்துகிறோம்!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் கூறியுள்ளார்.

ஆர்.குமரேசன் முன்னிலை! சோ. துரைபாண்டியன் ஏற்பாட்டில்

கோவை - 35வது வட்டத்தில் முதல்வர் பிறந்தநாள் விழா!

க.சுப்பிரமணியன் தலைமை! கண்ணகி - கழகத்தினர் பங்கேற்பு!

கோவை, மார்ச் 2-

பெரியாரின் துணிவும் அறிஞர் அண்ணாவின் கனிவும் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் உழைப்பும் ஒருசேர ஒருங்கே பெற்ற திராவிட மாடல் நாயகர் 71வது பிறந்த தினத்தை முன்னிட்டு அறிஞர் அண்ணா நகரில் காவல் செக் போஸ்ட் அருகில் கோவை வடக்கு மாவட்டம் 35வது வட்டக் கழகத்தின் சார்பில் அவைத்தலைவர் சோ. துரைப்பாண்டியன் ஏற்பாட்டில், வட்டச் செயலாளர் ஆர்.குமரேசன் முன்னிலையில், மூத்த முன்னோடியும் 16வது வட்டக் கழக அவை தலைவர் க.சுப்பிரமணியன் தலைமையில், 42வது வட்ட கழக அவை தலைவர் உதயசூரியன், கவுண்டம் பாளையம் பகுதி கழக துணைச் செயலாளர் திருமதி கண்ணகி முருகானந்தம், 48 வது வட்டக் கழக அவைத் தலைவர் நாகராஜன் ஆகியோர் ஒருங்கிணைப்பில், நலச் சங்க நிர்வாகிகள் பொது மக்கள், கழக உடன் பிறப்புகள் கலந்து கொண்டனர்.

பகுத்தறிவு பேரவை கழக அமைப்பாளர் கா. பொன்னரசு முன்னாள் காவல் ஆய்வாளர் மதிவாணன், சந்திரலிங்கம், ரவி முரசு, தியேட்டர் ராம்குமார், ஆட்டோ நகர் வீரப்பன், மார்க்கெட் தயானந்தன்,

மகளிர் அணியை சார்ந்த பி.எல்.ஏ. 2 கவிதா, நளாயினி, வசந்தா, நவநீதம், வனிதா மற்றும், டாக்ஸி சக்திவேல், பெட்டிக் கடை சசி, ஜெகதீசன், மாணிக்கராஜ், லிங்கன், பொது மக்களுக்கும் இனிப்புகள் வழங்கியதோடு பட்டாசுகள் வெடித்து வெகு விமரிசையாக கொண்டாடினர்.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க இல்லம்தோறும் ஸ்டாலினின் குரல் திண்ணைப் பிரச்சாரம் தடங்கம் கிராமத்தில் கிழக்கு மாவட்டக் கழக செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி தலைமையில் வீடு வீடாகச் சென்று கழக அரசின் சாதனைகளை விளக்கி பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது இதில் பொதுக்குழு உறுப்பினர் ஏலகிரி நடராஜன்,ஊராட்சி செயலாளர் கந்தசாமி,மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் தடங்கம்.எஸ்.இளையசங்கர், தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கௌதம், தர்மபுரி சட்டமன்ற தொகுதி ஒருங்கிணைப்பாளர் ரகு மற்றும் கழக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

நாமக்கல் கிழக்கு மாவட்டம் ராசிபுரம் நகரத்தில் மார்ச் 1 கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் ஆகியோர் ஆலோசனை படி, இளைஞர் அணி சார்பில் ராசிபுரம் நகர கழகச் செயலாளர் என்.ஆர்.சங்கர் தலைமையில் ஆதரவற்றோர் இல்லத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் ராசிபுரம் நகர்மன்ற தலைவர் முனைவர் கவிதா சங்கர், நாமக்கல் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் எம்.கார்த்திக், மாவட்ட மாணவரணி மணிகண்டன், ஆசைத்தம்பி, கந்தசாமி, செல்வம், விநாயகமூர்த்தி நட்ராஜ், கவுன்சிலர்கள் ரவிச்சந்திரன், ஆனந்த் மற்றும் இளைஞர் அணியினர் பலர் கலந்து கொண்டனர்.

ரூ. 2 கோடி கேட்டு

தருமபுர ஆதீனத்தை மிரட்டிய பா.ஜ.க.வினர் கைது!

மயிலாடுதுறை, மார்ச். 2

ஆடுதுறையைச் சேர்ந்த வினோத், தருமபுரம் ஆதீனத்திடம் பணிவிடையாக பணியாற்றும் திருவையாறு செந்தில் என்பருடன் கூட்டு சேர்ந்து தங்களிடம் தருமபுரம் ஆதீனகர்த்தர் சம்பந்தபட்ட ஆபாச வீடியோ, ஆடியோக்கள் உள்ளது. நாங்கள் கேட்கும் ரூ.2 கோடி பணத்தை கொடுக்காவிட்டால் சமூக வலைதளங்கள் மற்றும் டிவி சேனல்களில் ஆபாச விடியோ, ஆடியோக்களை வெளியிட்டு ஆதின மடத்தையும், மடாதிபதிகளையும் அவமானப்படுத்தி விடுவோம். இது தொடர்பாக திருவெண்காடு சம்பக்கட்டளையைச் சேர்ந்த விக்னேஷ், உங்களிடம் பேசுவார், பணம் கொடுக்காமல் போலீசிடம் சென்றால் விக்னேஷ் மூலம் ரவுடிகளை வைத்து மடத்தைச் சேர்ந்தவர்களை கொலை செய்ய தயங்க மாட்டோம் என்று மிரட்டினார்.

இது தொடர்பாக திருச்சி ஐ.ஜி.யின் தனிப்படை போலீசார் கந்த 28ஆம் தேதி இரவு குடியரசு, வினோத், விக்னேஷ், ஸ்ரீநிவாஸ் ஆகிய 4 பேரையும் கைது செய்தனர். வழக்கில் தலைமறைவாக உள்ள மணிலாடுதுறை மாவட்ட பா.ஜ.க. தலைவர் அகோரத்தை தனிப்படை போலீஸ்சார் தேடி வருகின்றனர்.

இந்த வழக்கில் கைதான வினோத் தஞ்சை வடக்கு மாவட்ட பா.ஜ.க. செயலாளர் . விக்னேஷ் சீர்காழி ஒன்றிய முன்னாள் பா.ஜ.க. தலைவர், ஸ்ரீநிவாஸ் பா.ஜ.க. தீவிர உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது. துலைமறைவாக உள்ள பா.ஜ.க. மாவட்ட தலைவர் அகோரம் இவர் ஏற்கனவே நாகை, மயிலாடுதுறை மாவட்டம் ஒருங்கிணைந்ததாக இருந்த போது ஒருங்கிணைந்த பா.ம.க. மாவட்ட செயலாளராக பணியாற்றி வந்தார்.

கடந்த 2014ம் ஆண்டு நாகை மாவட்டம் செம்பனார்கோயில் மாநில வண்ணியர் சங்க துணைச் செயலாளராக இருந்த மூர்த்தி என்பரை கொலை செய்த வழக்கில் அகோரம் முக்கிய குற்றவாளியாக சேர்க்கப்பட்டு கைது செய்யப்பட்டார். பின்னர் சிறையில் இருந்து வெளி வந்த அகோரம் 2020ம் ஆண்டு பா.ஜ.க.வில் சோந்து பா.ஜ.க.வின் அடைக்கலம் ஆகி மாவட்ட தலைவராக பெறுப்பேற்றார். இவர் மீது கொலை, தாக்குதல், கொலை மிரட்டல், அடிதடி, கட்டப்பஞ்சாயத்து, பணம் பறிமுதல் உள்ளிட்ட பல்வேறு வழக்குகள் சீர்காழி, கொள்ளிடம், மயிலாடுதுறை, குத்தாலம், நாகை, செம்பனார்கோயில் உள்ளிட்ட பல்வேறு காவல் நிலையங்களில் நிலுவையில் உள்ளன.

முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு தருமபுரம் ஆதினம் நன்றி. தருமபுரம் ஆதீனம்27 வது குருமகா சந்நிதானமாக ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிகஞான சம்பந்த பரமாச்சாரியார் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது. இதை சட்டரீதியாக எதிர்கொள்ள வேண்டும் என நாங்கள் காவல்துறையை நாடினோம். காவல்துறை தமிழகமுதல்வரின் ஆணைப்படி இதில் சம்பந்தப்பட்டவர்கள் மீது மிகதுரிதமாக சட்டப்படியான நடவடிக்கை எடுத்துள்ளது. துரிதமாக நடவடிக்கை எடுத்து எங்களையும், எங்கள் மடத்தின் பெருமையையும் காத்த காவல் துறைக்கு எங்கள் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொளகிறோம். தருமபுர மடத்தையும், எங்களையும் ரவுடிகளிடம் இருந்து மீட்டெடுத்த நம் தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்

இவ்வாறு தருமபுர ஆதினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் ஓசூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஓசூர் மாநகரில் மாநகரச் செயலாளர் மேயர் எஸ்.ஏ.சத்யா தலைமையில் தொகுதி பார்வையாளர் – கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் வேலூர்.ஜி.ரமேஷ் முன்னிலையில் "இல்லம் தேடி ஸ்டாலின் குரல்" என்ற சென்னை பிரச்சார பரப்புரை கூட்டம் தொடங்கி நடைபெற்றது. இந்நிகழ்வில் பகுதி கழகச் செயலாளர்கள் துணைமேயர் என்.அனந்தையா, ஜி.ராமு எம்.கே வெங்கடேஷ் கே.திம்மராஜ் மண்டல குழு தலைவர் கோபாலகிருஷ்ணன் மாநகர அவைத் தலைவர் செந்தில்குமார் கோபாலகிருஷ்ணன், ரவிக்குமார் மற்றும் மாவட்ட பிரதிநிதிகள் வட்டக் கழக செயலாளர்கள் மாமன்ற உறுப்பினர்கள் வாக்குச்சாவடி ஒருங்கிணைப்பாளர்கள் அணிகளின் நிர்வாகிகள் பி.எல்.ஏ 2. பி.எல்.சி உறுப்பினர்கள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.